அவர்கள், தன்னுடைய தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையமும், 30 படுக்கை வசதி கொண்ட தரம் உயர்த்தப்பட்ட புதிய மருத்துவமனையும் வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவை வருங்காலத்தில் பரிசிலிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, அவையில் இல்லை.

வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

திருத்தேர்

***92103—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயில் தேர்த் திருப்பணிக்குத் திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் தற்போது புதிய தேர் செய்ய வழிவகையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரான மார்த்தாண்ட மன்னரால் கட்டப்பட்ட மிகப் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க

[2011 பிப்ரவரி 5

ஆலயமான நாறும் பூ நாதர் ஆலயம் பழவூரிலே இருக்கின்றது. அதே காலகட்டத்தில், அதே மன்னரால் களக்காட்டிலும், திருப்புடைமருதூரிலும், கட்டப்பட்ட ஆலயங்கள் உள்ளன. அந்த இரண்டு ஆலயங்களுக்கும் தேர் செய்யப்பட்டு அருமையாக ஓடிக் கொண்டிருக்கின்றன. முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் தமிழ்நாட்டில் இருக்கிற ஆலயங்களில் எல்லாம் கும்பாபிஷேகம் நடத்துவது முதல், தேர் ஓடாத கோயிலே இல்லை என்ற நிலை ஏற்பட்டு அருமையாக அறநிலையத் துறைமூலம் சிறந்த பணிகளைத் தாங்கள் செய்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த ஆலயத்தில் வருமானம் குறைவாக இருப்பதால், வசதி வாய்ப்புள்ள திருச்செந்தூர் ஆலயம் போன்ற ஆலயங்களிலிருந்து நிதியை ஒதுக்கி அல்லது அரசு சிறப்பு நிதி ஒதுக்கி, இந்த ஆலயத்திற்குத் தேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் இருக்கக்கூடிய 960 மரத் தேர்களில், பழுதடைந்த, ஓடாத நிலையிலே கண்டறியப்பட்ட மரத் தேர்களின் எண்ணிக்கை 300. அவற்றை திருப்பணி செய்து இயக்குவதற்காக 10 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நிதியைக் கொண்டு ஏற்கெனவே திருக்கோயில்களிலே இருக்கக்கூடிய அந்தத் தேர்கள் பழுது நீக்கப்பட்டு வருகின்றன. புதிய தேர்களைப் பொறுத்தவரையில், அந்தந்தத் திருக்கோயில்களில் போதிய நிதி வசதி இல்லை என்றாலும்கூட, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொதுமக்கள், பக்தர்கள் முன்வந்து ஒரு தொகையை தங்களின் பங்களிப்பாகத் தருவார்களேயானால், துறையின் சார்பிலும் நிதியை ஒதுக்கி, எதிர்காலத்தில் அங்கும் தேர் அமைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, அதே ஆலயத்திற்குத் திருப்பணி செய்வதற்கும்,

2011 பிப்ரவரி 5]

கும்பாபிஷேகம் நடத்துவதற்கும் அரசு 6 இலட்சம் ரூபாய் நிதி தந்து பக்தர்களுடைய பங்களிப்போடு 10 இலட்சம் ரூபாய் அளவில் பணிகள் நடைபெற்று, இப்போது கும்பாபிஷேகம் முடிந்திருக்கிறது. தேர் செய்ய வேண்டுமென்று பக்தர்களும் பலமுறை கோரிக்கை வைத்து வருகிறார்கள். பாண்டிய மன்னர் ஆட்சிக் காலத்திலேயே தேர் செய்ய முயற்சி செய்யப்பட்டு, அது முற்றுப்பெறாமல் இருந்திருக்கிறது. பாண்டிய மன்னர் காலத்தில் முடியாததை தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் சற்று அதிகமான நிதியைக் கொடுத்து— திருவாங்கூருக்கும், தமிழ்நாட்டிற்கும் அருகில் இருக்கிற முதல் ஆலயம் அந்த ஆலயம்தான்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தேர் செய்வதற்கு நிதியை ஒதுக்கினால் பக்தர்களுடைய பங்களிப்பாக நாங்களும் ஒரு தொகையைக் கொடுத்து, தேர் செய்வதற்கு முன்வருகிறோம் என்பதை இந்த நேரத்தில் கூறி, அதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முயற்சி திருவினையாக்கும்' என்ற கூற்றுக்கிணங்க தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் முயற்சி செய்வதோடு, பொதுமக்களுடைய பங்களிப்பு நிதியையும் திரட்டினால், அரசின் சார்பில் விரைந்து தேர் செய்யப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் பேரூராட்சியிலே அருள்மிகு மாரியம்மன் கோயில் என்ற மிகப் பழமையான, மிகப் பெருமைபெற்ற கோயில் அமைந்துள்ளது. அது பொதுமக்களுடைய பங்களிப்பினைப் பெற்று கடந்த ஓராண்டுக்கும் மேலாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ 2 கோடி ரூபாய்க்கு மேலாக செலவினங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலே, அதனை நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரும் நேரிலே வந்து பார்வையிட்டு இருக்கின்றார்கள். அதற்கு முன் மண்டபமும், சுற்றுச் சுவரும் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாத

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 5

காரணத்தாலே அவற்றை அறநிலையத் துறை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்மொழிவுகளைத் துறையின் அலுவலர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைத்தால் அதுபற்றிப் பரிசிலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ஆர். பிரேமா, அவையில் இல்லை.

வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

8—

திரைப்படம்

***16283—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளை திரைப்படமாகத் தொகுத்து கிராம இளைஞர்களுக்குக் காட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) உலக நாடுகளில் நடைபெறும் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டிகளைத் திரைப்படமாகத் தொகுத்து கிராம இளைஞர்களுக்குக் காட்டுவது தொடர்பான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.